ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 4.3 – பேரணிந்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.3 – பேரணிந்து

‡ பேர் அணிந்துலகத்தவர் தொழுதேத்தும் ⋆
பேர் அருளாளன் எம் பிரானை ⋆
வார் அணி முலையாள் மலர் மகளோடு ⋆
மண் மகளும் உடன் நிற்ப ⋆
சீர் அணி மாட நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
கார் அணி மேகம் நின்றதொப்பானைக் ⋆
கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே ‖ **4.3.1** ‖

பிறப்பொடு மூப்பொன்றில்லவன் தன்னைப் ⋆
பேதியா இன்ப வெள்ளத்தை ⋆
இறப்பெதிர் காலம் கழிவும் ஆனானை ⋆
ஏழ் இசையின் சுவை தன்னை ⋆
சிறப்புடை மறையோர் நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
மறைப் பெரும் பொருளை வானவர் கோனைக் ⋆
கண்டு நான் வாழ்ந்தொழிந்தேனே ‖ **4.3.2** ‖

திட விசும்பெரி நீர் திங்களும் சுடரும் ⋆
செழு நிலத்துயிர்களும் மற்றும் ⋆
படர் பொருள்களுமாய் நின்றவன் தன்னை ⋆
பங்கயத்தயன் அவன் அனைய ⋆
திட மொழி மறையோர் நாங்கை நன் நடுவுள் ⋆

செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
கடல் நிற வண்ணன் தன்னை நான் அடியேன் ⋆
கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே ॥ **4.3.3** ॥

வசையறு குறளாய் மாவலி வேள்வி ⋆
மண் அளவிட்டவன் தன்னை ⋆
அசைவறும் அமரர் அடி இணை வணங்க ⋆
அலை கடல் துயின்ற அம்மானை ⋆
திசைமுகன் அனையோர் நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
உயர் மணி மகுடம் சூடி நின்றானைக் ⋆
கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே ॥ **4.3.4** ॥

தீ மனத்தரக்கர் திறல் அழித்தவனே ! என்று ⋆
சென்றடைந்தவர் தமக்கு ⋆
தாய் மனத்திரங்கி அருளினைக் கொடுக்கும் ⋆
தயரதன் மதலையைச் சயமே ⋆
தேமலர்ப் பொழில் சூழ் நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
காமனைப் பயந்தான் தன்னை நான் அடியேன் ⋆
கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே ॥ **4.3.5** ॥

மல்லை மா முந்நீர் அதர் பட ⋆
மலையால் அணை செய்து மகிழ்ந்தவன் தன்னை ⋆
கல்லின் மீதியன்ற கடி மதிள் இலங்கை கலங்க ⋆
ஓர் வாளி தொட்டானை ⋆
செல்வ நான் மறையோர் நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆

அல்லி மா மலராள் தன்னொடும் அடியேன் ⋆
கண்டு கொண்டல்லல் தீர்ந்தேனே ॥ **4.3.6** ॥

வெஞ்சினக் களிறும் வில்லொடு மல்லும் ⋆
வெகுண்டிறுத்தடர்த்தவன் தன்னை ⋆
கஞ்சனைக் காய்ந்த காளை அம்மானைக் ⋆
கரு முகில் திரு நிறத்தவனை ⋆
செஞ்சொல் நான் மறையோர் நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
அஞ்சனக் குன்றம் நின்றதொப்பானைக் ⋆
கண்டு கொண்டல்லல் தீர்ந்தேனே ॥ **4.3.7** ॥

‡ அன்றிய வாணன் ஆயிரம் தோளும் துணிய ⋆
அன்றாழி தொட்டானை ⋆
மின் திகழ் குடுமி வேங்கட மலை மேல் ⋆
மேவிய வேத நல் விளக்கை ⋆
தென் திசைத்திலதம் அனையவர் நாங்கைச் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை ⋆
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே ॥ **4.3.8** ॥

களங்கனி வண்ணா ! கண்ணனே ! என்தன் ⋆
கார் முகிலே ! என நினைந்திட்டு ⋆
உளம் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் ⋆
உள்ளத்துள் ஊறிய தேனை ⋆
தெளிந்த நான்மறையோர் நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆

வளங்கொள் பேர் இன்பம் மன்னி நின்றானை ⋆
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே ॥ **4.3.9** ॥

‡ தேன் அமர் சோலை நாங்கை நன் நடுவுள் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
வானவர் கோனைக் கண்டமை சொல்லும் ⋆
மங்கையார் வாட் கலிகன்றி ⋆
ஊனம் இல் பாடல் ஒன்பதோடொன்றும் ⋆
ஒழிவின்றிக் கற்று வல்லார்கள் ⋆
மான வெண் குடைக் கீழ் வையகம் ஆண்டு ⋆
வானவர் ஆகுவர் மகிழ்ந்தே ॥ **4.3.10** ॥

அடிவரவு — பேரணிந்து பிறப்பு திட வசை தீமனத்து மல்லை வெஞ்சினம் அன்றிய களங்கனி தேனமர் மாற்றரசர்

பேரணிந்து முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்